IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.167/2023

Deposition of Witness for P.W.12

| | | |
|---|---|---|
| NAME | - | சாமுண்டீஸ்வரி |
| FATHER NAME | - | செல்வராஜ் |
| VILLAGE | - | கந்தநேரி |
| TALUK | - | அணைக்கட்டு |
| OCCUPATION | - | தனியார் நிறுவனம் |
| AGE | - | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் கந்தநேரி அணைக்கட்டில் குடியிருக்கிறேன். தனியார் Shoe company ல் வேலை செய்கிறேன். எனக்கும் இவ்வழக்கில் இறந்த செல்வராஜிக்கும் 2010 ல் திருமணம் ஆனது. இறந்த கோவிந்தன் எனது மாமனார், ஆண்டாள் எனது மாமியார், ரமேஷ் எனது கொழுந்தனார். 2012 ல் நான் எனது கணவர் செல்வராஜை விட்டு பிரிந்து எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். 2012 லிருந்து நான் தனியாக தான் வாழ்ந்து வருகிறேன். 2019 ல் எனது கணவர் இறந்தது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் தனியாக வாழ்ந்து வருகிறேன் எனது கணவரை பற்றி தெரியாது என சொல்லிவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை-</u>

எனது அப்பாவை எனது கணவர் செல்வராஜ் கொன்ற வழக்கு எனது கணவர் மீது இருந்தது என்றால் சரி. வெடி குண்டு வழக்கு எனது கணவர்

மற்றும் அப்பா மீதும் இருந்தது என்றால் சரி. இறந்துபோன செல்வராஜ் எங்களது வீட்டை கொளுத்திய வழக்கும் அவர் மீது இருந்தது என்றால் சரி. நான் அவருடன் வாழ்ந்த காலக்கட்டத்திலும் அவர் மீது பல வழக்குகள் நிலுவையில் இருந்தது. எனது கணவர் இறப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பாக நான் விவாகரத்து வழக்கை தாக்கல் செய்தேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 20.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.20 19:49:29 +0600

Additional District Judge(FTC),
Vellore